**STC No.151/2024**
**D.W.1**

| | | |
|---|---|---|
| திரு.மதுரை முத்து | த/பெ.கிருஷ்ணமூர்த்தி | Date:07.08.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு
**<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பேச்சிராஜா, முருகன் ஆகியோரிடம் 2022ம் ஆண்டு எனது யர்ட்டிகா வாகனத்தை அடகு வைத்தேன். எனது மகன் பார்த்திபன்தான் வைத்தார். மேற்படி காரை அடகு வைத்ததற்கான ஆவணங்கள் எனது வசம் உள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் வசமும் இல்லை. மேற்படி வாகனத்தின் பதிவு சான்றுதழ் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் அதையும் சேர்த்துதான் அடகு வைக்கும் போது கொடுத்துள்ளார். மேற்படி வாகனத்தை அடகு வைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி வாகனம் மனுதாரரின் கணவர் ஓட்டிச் சென்று விபத்து ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அவர் யார் என்றே எனக்கு தெரியாது.

2. நான் சொன்ன தகவல் அடிப்படையில்தான் புகார்தாரரை எனது வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார் என்றால் சரிதான். திருக்குறுங்குடியில் விபத்தான வாகனத்தை நான்தான் மனு தாக்கல் செய்து எடுத்துச் சென்றீர்களா என்றால் இல்லை. நான் 2023ம் ஆண்டு யர்ட்டிகா வாகனத்தை மேற்படி முருகன், பேச்சிராஜா ஆகியோரிடமிருந்து திரும்ப பெற்றுக்கொண்டேன். அந்த வாகனம் அப்போது ஓடும் நிலையில்தான் இருந்தது என்றால் அந்த வாகனத்தை அப்போதே மேற்படி வாகனத்திற்கு தவணைத்தொகை செலுத்தவில்லை என்பதால் கம்பேனிக்கு கொடுத்துவிட்டார். நான் முருகன், பேச்சிராஜா ஆகியோர் மீது காவல் நிலையத்தில் எனது மகன் ஆன்லைன் மூலம் புகார் கொடுத்தார். நான் கொடுக்கவில்லை. அந்த புகாரில் வழக்கு காசோலை முருகன், பேச்சிராஜா

இடம் உள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.மா.சா.4 ல் ஆவணத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் காவல் துறையில் கொடுத்த புகார் மற்றும் விசாரணையின் நகல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வழக்கு காசோலை விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது.

3. மேற்படி பதிலில் மனுவிற்கு மனுதாரர் ஆஜராகவில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் மேற்படி ஆவணம் வழக்கிற்கு தொடர்பற்றது என்றால் சரியல்ல. எ.மா.சா.6 மற்றும் 7 ஆவணம் தனியார் ஆவணம் என்பதாலும், பொது ஆவணம் அல்ல என்பதாலும், வழக்கிற்கு தொடர்பற்றது என்றாலும் மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக நானே தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் 10.07.2022 தேதியில் நான் சொல்வது போல் பணியில் இல்லை என்றால் சரியல்ல. காசோலைகளை முருகன், பேச்சிராஜா ஆகியோர்கள் மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் புகார்தாரரிடம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

4. நான் சொல்வது போல் காசோலை முருகன், பேச்சிராஜாவிடம் கொடுக்கப்பட்டதாகவும் அவர்கள் என்னை ஏமாற்ற வேண்டும் என இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எ.மா.சா.1 முதல் 3, 5 வழக்கிற்கு தொடர்பற்றவை என்றால் சரியல்ல. நான் வங்கியில் எத்தனை வருடமாக கணக்கு வைத்துள்ளேன் என்றால் அது எனது ஆலையத்திலிருந்து பணிக்காக தொடங்கப்பட்ட கணக்காகும். நான் வங்கி பரிவர்த்தனைக்காக வேறு கடன்களுக்கு காசோலை கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. காசோலையை திரும்ப தருமாறு நேரடியாகவும், தபால் மூலமாகவும் முருகன், பேச்சிராஜாவிடம் கேட்கவில்லை. வழக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அதற்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரரிடம் கடன் பெற்ற காரணத்தினால்தான் பதில் அறிவிப்பு

அனுப்பவில்லை என்றாலும், புகார்தாரர் மற்றும் அவருடைய கணவரிடமிருந்து ரூபாய் 4 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு தற்போது வழக்கில் இருந்து தப்பிக்கவேண்டி பொய்யாக எதிர் வாதங்களை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் காசோலையை தவறாக பயன்படுத்தலாம் என கருதி வங்கிக்கு ஸ்டாப் பேமண்ட் செய்ய மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரருக்கு முருகன், பேச்சிராஜா, இஸ்ரவேல் ஆகியோர்களை யார் என தெரியாது என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.08.07 14:32:30 +0530

Judicial Magistrate,
Valliyoor.